**செய்தி வெளியீடு எண்: 022** **நாள்: 05.01.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 4.1.2018 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறையின் சார்பில் 1 கோடியே 13 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் சின்னசேலம் கிளை அலுவலகக் கட்டடம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 1.8.2014 அன்று சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், கூட்டுறவு வங்கிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, வணிக வங்கிகளுக்கு இணையான சேவையை பொதுமக்களுக்கு வழங்கும்பொருட்டு, வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வரும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நவீன வசதிகள் கொண்ட சொந்த கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, விழுப்புரம் மாவட்டத்தில் 53 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் சின்னசேலம் கிளை அலுவலகக் கட்டடம்;

திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் நிர்வாக அலுவலகத்திற்கென கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 1 கோடியே 13 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவுத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு, தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க.சண்முகம், இ.ஆப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஆர். இளங்கோவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**